DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 81/2023

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | தனபால் |
| Father / Husband Name | மன்னன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 28.08.2025

**குறுக்கு விசாரணை:**

1. நான் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது எதிரி காண்ட்ராக்டராக இருந்தார். அந்த அடிப்படையில் அவரை எனக்கு சுமார் 15 ஆண்டுகளாக தெரியும். நான் கல்பாக்கத்தில் பணிபுரிந்தபோது எதிரி அவர் வீட்டில் பிரச்சனை என்று காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க வந்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. பின்னர் எதிரியை விசாரிக்கும்போதே வெகுளித்தனமாக இருந்தார் என்பதை தெரிந்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. நான் எதிரியின் மூலம் தான் பல நபர்களிடம் கையூட்டு பெற்றேன் என்றால் சரியல்ல. அந்த பணத்தை எதிரி எடுத்துக்கொள்ள போகிறார் என்ற பாதுகாப்பு காரணத்திற்காக எதிரியிடம் காசோலையை பெற்றேன் என்றால் சரியல்ல.

2. எதிரி மீது பொய் புகார் போட்டு பொய் வழக்கு தாக்கல் செய்துவிடுவேன் என மிரட்டி அவரை சம்மதிக்க வைத்தேன் என்றால் சரியல்ல. தன்னுடைய புகாரில் நான் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது எதிரி காண்ட்ராக்டராக இருந்தார் என குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் எப்போது பணி ஓய்வு பெற்றேன் என்றால் 31.08.2012. எதிரியிடம் கையூட்டு பணம் 50,000/- நின்றுவிட்டு என்றாலும், அதை கேட்டு நான் அவருக்கு பலமுறை தொலைப்பேசியில் அழைத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் வாங்கிய பணத்தில் 50,000/- கொடுத்தார். அவர் அந்த 50,000/-த்தை கொடுத்துவிடுகிறேன் என்று கூறியதற்கு நான் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரியல்ல.

3. நான் எதிரியிடம் பதில் அறிவிப்பு எதுவும் கொடுக்கவேண்டாம் சமாதானம் பேசிக்கெள்ளலாம் என்று கூறினேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 என்னுடைய வழக்கறிஞர் அளித்த அறிவிப்பு தான் காசோலை போதிய பணம் இல்லை என்று திரும்பி வந்ததால் அந்த அறிவிப்பை கொடுத்தேன். அந்த அறிவிப்பு நான் சொல்லிதான் வழக்கறிஞர் அனுப்பினார். அதை பெற்றுக்கொண்ட எதிரி அவர் தரவேண்டிய 50,000/-த்தை கொடுத்துவிடுவதாக கூறினார் என்றால் சரியல்ல. அதனால் தான் எதிரி எந்த அறிவிப்பும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு

தாக்கல் செய்த பிறகு எதிரி எனக்கு ரூ.50,000/– வங்கி கணக்கில் செலுத்தினார், எந்த தேதியில் செலுத்தினார் என்று தேதி நினைவில் இல்லை. 50,000/– செலுத்திவிட்டால் வழக்கை திரும்ப பெற்றுக்கொள்வதாக நான் சொன்ன வார்த்தையை நம்பி தான் எதிரி என்னுடைய வங்கி கணக்கில் ரூ.50,000/– செலுத்தினார் என்றால் சரியல்ல.

4. காசோலையில் உள்ள கையெழுத்து எதிரியுடையது அல்ல என்றாலும், அதை பூர்த்தி செய்ததும் எதிரி அல்ல என்றாலும் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையிலும் எதிரி எனக்கு தரவேண்டிய 50,000/– த்தை கொடுத்துவிட்டார் என்ற சங்கதியை மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது கையூட்டு வாங்கிய சங்கதியை மறைப்பதற்காக எதிரிக்கு எதிராக பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி கல்பாக்கம் GSO, IGCar, Bavani, PSO, Anupuram ஆகிய இடங்களில் காண்ட்ராக்டராக பணிபுரிகிறார். மேற்படி சங்கதியை ஏன் புகாரில் சொல்லவில்லை என்றால் அது இந்த வழக்கிற்கு சம்மந்தம் அற்றது. எதிரி தனியார் நிறுவனத்தில் பணிபுரிகிறார் என்றாலும், அவர் காண்ட்ராக்டராக தொழில் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

5. எதிரியை எனக்கு சாதகமாக பயன்படுத்தி நான் கையூட்டு பெற்றேன் என்றால் சரியல்ல. எதிரி விவரம் அறியாதவர் என்றாலும், நான் அவருடைய காசோலையை பயன்படுத்தி பொய் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரி என்னிடம் எந்த கடனும் பெறவில்லை என்றாலும், எதிரி காசோலையும் என்னிடம் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. 2012 ம் ஆண்டு எதிரியை மிரட்டி வாங்கிய பூர்த்தி செய்யப்படாத காசோலையை பயன்படுத்தி அவருடைய கையெழுத்தை நானே போட்டு காசோலையை பூர்த்தி செய்து 10 வருடம் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய முகாந்திரம் இல்லை என்றாலும், இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல. எதிரியை பழிவாங்க வேண்டும் என்பதற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்பதால் தான் என்னுடைய சாட்சிகளும் ஆவணங்களும் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல.